## 28.25 நில ஒப்படை தொடர்பாக உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் – அரசின் முடிவுகள்

வருவாய் ( நிலம் 3–1 ) துறை

அரசாணை (நிலை) எண். 345 நாள் : 2.7.1999

படிக்க :

1. அரசாணை நிலை எண். 320 ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.1.97.
2. அரசாணை நிலை எண். 100 ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.5.98.

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சி பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு உயர்நிலைக்குழு ஒன்று மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்று மற்றும் இரண்டில் ஏற்படுத்தப்பட்டது. குழு தனது அறிக்கையை 1.1.99 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தது. குழு தனது அறிக்கையில் பல்வேறு பொருள்களுடன் நில ஒப்படை தொடர்பாகவும் பரிந்துரை செய்திருந்தது. குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்வதற்காக 3.5.99 மற்றும் 4.5.99 ல் நடைப்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நில ஒப்படை சம்மந்தமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு சில அதிகாரங்களை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ்வாணையில் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

2. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தனது நிர்வாகத்தில் கீழிருக்கும் அலுவலர்களுக்கு இதன் தொடர்பாக அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார் வழங்கப்பட்ட அறிவுரைகளின் நகல் ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

( ஆளுநரின் ஆணைப்படி )

**தேபேந்திரநாத் சாரங்கி**
அரசு செயலாளர்

### பிற்சேர்க்கை

### நில ஒப்படை தொடர்பான பரிந்துரையின் தொடர் எண்.

**கிராம ஊராட்சிகள்**

74. புறம்போக்கு நிலங்கள் தனியாரிடம் இருக்கும் பட்சத்தில் அது பொது பயனீட்டிற்குப் பயன்படாத நிலமாக இருந்தால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அதனைப் பிரித்துக் கொடுக்க ஊராட்சிகள் பரிந்துரை செய்தல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

75. துண்டு நிலங்களை ஒருங்கிணைப்பதில் தனி நபர் சம்பந்தமான தேர்வுகளில் தலையிடாமல் பொதுவாக வருவாய் அலுவலர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்.

**தேபேந்திரநாத் சாரங்கி**
அரசு செயலாளர்